International Association of Oil & Gas Producers

வேலை தொடங்கும் முன் சரிபார்ப்பு - SWC

உயரத்தில் வேலை செய்யும் போது (Working at Height)

எப்போது முடிக்க வேண்டும் - உயரத்தில் வேலை செய்யும் எந்தவொரு செயல்பாடுகளையும் தொடங்குவதற்கு முன்பு

தொடங்குவதற்கு முன் கீழே உள்ள ஒவ்வொரு கட்டுப்பாடும்/ பாதுகாப்பையும் உறுதிப்படுத்தவும் வேலை	ஒவ்வொரு கட்டுப்பாடு / பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதற்கான வழிகாட்டுதல்	பணியைச் செய்யும் நபர்(கள்)	வேலை தொடக்க சரிபார்ப்பாளர்
நான் உறுதிப்படுத்தியுள்ளேன்:			
1 **ஆபத்துகள் அடையாளம் காணப்பட்டுள்ளன, கட்டுப்படுத்தப்பட்டுள்ளன, மேலும் வேலை தொடங்குவது பாதுகாப்பானது.**	• வேலையின் வரம்பிற்கு (Scope of Work) ஏற்ப குறிப்பிட்ட பணிக்கான ஆபத்து மதிப்பீட்டை (Risk Assessment) பூர்த்தி செய்யவும். • வேலை தொடங்குவதற்கு முன், வேலைக்குழுவினருடன் (Work Team) ஆபத்துகள் குறித்து கலந்துரையாடவும். • கூடுதல் ஆபத்துகளை உருவாக்கக்கூடிய ஒரே நேர செயல்பாடுகள் (Simultaneous Operations) உள்ளனவா என்பதைச் சரிபார்க்கவும்.		
2 **எனது கீழே விழுதல் தடுப்பு (Fall Protection) உபகரணங்கள்:** • **சான்றளிக்கப்பட்டவை (Certified)** • **பரிசோதிக்கப்பட்டவை (Inspected)** • **தேவையான சுமைத் திறன் மதிப்பீடு கொண்டவை (Rated) செய்யப்படும்** • **பணிக்கு ஏற்றவை (Fit for the Task)**	• கீழே விழுதல் தடுப்பு (Fall Protection) உபகரணங்களில் Fall Arrest மற்றும்/அல்லது Fall Restraint அமைப்புகள் அடங்கும். • முழு உடல் பாதுகாப்பு ஹார்னஸ் (Full Body Harness) பணியாளரின் எடையைத் தாங்கக்கூடிய சுமைத் திறன் (Load Rated) கொண்டதாக இருக்க வேண்டும். • கீழே விழுதல் தடுப்பு ஹார்னஸில் உள்ள ஒவ்வொரு பட்டை (Strap), கொக்கி (Buckle), இணைப்பு பகுதி (Fitting) மற்றும் குரோமெட் (Grommet) ஆகியவற்றில் சேதம் அல்லது kulaiவு அறிகுறிகள் உள்ளனவா என்பதைச் சரிபார்க்கவும். • Fall Arrest அமைப்பில் Self-Retracting Lifeline அல்லது Shock-Absorbing Lanyard இருக்க வேண்டும். • Fall Restraint அமைப்பில், பணியாளர் விளிம்பை (Edge) அடைந்து கீழே விழுவதைத் தடுக்க நிரந்தர Lifeline பொருத்தப்பட்டிருக்க வேண்டும். • Fall Arrest அமைப்பின் நீளம், ஏற்படக்கூடிய விழும் தூரத்தை (Potential Fall Distance) விட குறைவாக இருக்க வேண்டும். குறிப்பு: கீழே விழுதல் தடுப்பு உபகரணங்களில் அதிகப்படியான சேதம், kulaiவு அல்லது குறைபாடுகள் காணப்பட்டால், உடனடியாக வேலையை நிறுத்தி மேற்பார்வையாளருக்கு (Supervisor) தெரிவிக்கவும்.		
3 **கீழே விழுதல் தடுப்பு பாதுகாப்பு ஹார்னஸ் (Fall Protection Harness) சரியாகப் பொருந்தும் வகையில் சரிசெய்யப்பட்டுள்ளது.**	• முழு உடல் பாதுகாப்பு ஹார்னஸ் (Full Body Harness) மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். • ஹார்னஸின் பட்டைகள் (Harness Straps) முறுக்கப்படாமல் இருக்க வேண்டும். • ஹார்னஸின் உடல் பட்டைகள் (Body Straps) உடலுக்கு நெருக்கமாகவும், தளர்வில்லாமலும் சரிசெய்யப்பட்டிருக்க வேண்டும். குறிப்பு: உடல் பெல்ட் (Body Belt) பயன்படுத்த அனுமதி இல்லை		
4 **100% Tie-Off உறுதி செய்ய அங்கீகரிக்கப்பட்ட நங்கூரப் புள்ளி(கள்) (Anchor Point(s)) சரியான இடத்தில் அமைக்கப்பட்டுள்ளன.**	• பாதுகாப்பு கைப்பிடிகள் (Handrails) இல்லாத உயரமான வேலைப் பகுதிகள் போன்ற பாதுகாக்கப்படாத இடங்களிலும் 100% Tie-Off பராமரிக்கப்பட வேண்டும். • Anchor Point (நங்கூரப் புள்ளி) நிறுவனம் மற்றும் சட்டப்பூர்வ (Regulatory) தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டும். • Anchor Point-களின் அமைவிடம் 100% Tie-Off செய்யக்கூடிய வகையில் இருக்க வேண்டும். • 100% Tie-Off உறுதி செய்ய போதுமான எண்ணிக்கையில் Anchor Point-கள் இருக்க வேண்டும். • இணைப்பு சாதனம் (Connecting Device) பாதுகாப்பாக இணைக்கப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்த அதை இழுத்து சோதிக்கவும். குறிப்பு :உயரத்தில் வேலை செய்யும் அனைவரும் எப்போதும் 100% Tie-Off நிலையில் இருக்க வேண்டும்.(எ.கா., எந்த நேரத்திலும் குறைந்தபட்சம் ஒரு ஹுக் (Hook) Anchor Point-இல் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.)		

5	**கீழே விழுதல் ஏற்பட்டால், விழும் பாதை (Fall Path) தடைகளின்றி தெளிவாக உள்ளது.**	• பணியாளர் கீழே விழும் சூழ்நிலை ஏற்பட்டால் அவரை பாதுகாப்பாகக் காக்கும் வகையில் கீழே விழுதல் தடுப்பு (Fall Protection) உபகரணங்கள் பொருத்தமானதாக இருக்க வேண்டும். • Fall Arrest அமைப்பின் நிறுத்தும் தூரம் (Fall Arrest Distance), முதல் தடையை (Obstruction) அடையும் விழும் தூரத்தை விட குறைவாக இருக்க வேண்டும். • பணியாளர் ஊசலாடும் (Swing) வாய்ப்பு இருந்தால், அவர் செல்லக்கூடிய பாதையில் எந்தத் தடைகளும் இல்லையா என்பதைச் சரிபார்க்கவும். • விழும் பாதையில் உள்ள நகர்த்தக்கூடிய தடைகள் (Mobile Obstructions) அனைத்தும் அகற்றப்பட்டிருக்க வேண்டும்.		
6	**உயரத்தில் பயன்படுத்தப்படும் கருவிகள் மற்றும் பொருட்கள் பாதுகாப்பாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.**	• உயரத்தில் பயன்படுத்தப்படும் கருவிகளில் (Tools) பாதுகாப்பு வயர் (Securing Wire), லேன்யார்டு (Lanyard) அல்லது டெதர் (Tether) பொருத்தப்பட்டிருக்க வேண்டும். • உயரத்தில் பயன்படுத்தப்படும் பொருட்கள் (Materials) சேமிப்பு பெட்டிகள் (Storage Boxes), பைகள் (Bags), கருவிப் பைகள் (Tool Pouches) போன்றவற்றில் பாதுகாப்பாக வைக்கப்பட வேண்டும். • கீழ் நிலைகளுக்குச் செல்லும் திறப்புகள் (Openings) கிரேட்டிங் (Grating), இடைவெளிகள் (Gaps) போன்றவை மூடப்பட வேண்டும் அல்லது குப்பைத் தடுப்பு வலைகள் (Debris Nets) பயன்படுத்தப்பட வேண்டும். குறிப்பு :தளம்/நிறுவனத்தின் விழும் பொருள் தடுப்பு திட்டத்தை (Dropped Object Prevention Program) பின்பற்ற வேண்டும். (எ.கா., உயரத்தில் பயன்படும் கருவிகளுக்கான பதிவு பட்டியல் - Work at Height Tool Register).		
7	**தடுப்புகள் (Barriers) மற்றும் பொருள் விழும் / நுழைவு தடை பகுதிகள் (Drop/Exclusion Zones) அமைக்கப்பட்டுள்ளன.**	• பொருள் விழும் பகுதி (Drop Zone) மற்றும் நுழையத் தடைசெய்யப்பட்ட பகுதி (Exclusion Zone) ஆகியவற்றை அடையாளம் காணவும். • உயரத்தில் வேலை நடைபெறும் போது, பொருள் விழும் பகுதி (Drop Zone) மற்றும் நுழைவு தடை பகுதி (Exclusion Zone) ஆகியவற்றிற்கான அணுகலை கட்டுப்படுத்தவும் (எ.கா., கண்காணிப்பாளர் (Attendant) அல்லது உடல் ரீதியான தடுப்புகள் (Physical Barriers) மூலம்).		
8	**மீட்புத் திட்டம் (Rescue Plan) தயாராக உள்ளது மற்றும் தேவைப்படும் போது உடனடியாக செயல்படுத்தத் தயாராக உள்ளது.**	• வேலைக்குழுவினர் (Work Crew) மீட்புத் திட்டம் (Rescue Plan) குறித்து கலந்துரையாடியிருக்க வேண்டும். இதில்: - மீட்பு நடவடிக்கையை எவ்வாறு தொடங்குவது - மீட்பு உபகரணங்கள் மற்றும் மீட்புக் குழுவினர் இருக்கும் இடம் • மீட்புக் குழு (Rescue Crew): - தயாராகவும் உடனடியாக கிடைக்கக்கூடியவர்களாகவும் இருக்க வேண்டும் - இந்தப் பணியுடன் தொடர்புடைய குறிப்பிட்ட ஆபத்துகளை அறிந்திருக்க வேண்டும் – மீட்புத் திட்டத்தை திறம்பட செயல்படுத்தும் திறன் கொண்டிருக்க வேண்டும்		

இந்த கட்டுப்பாடுகள் / பாதுகாப்புகள் நடைமுறையில் உள்ளனவா மற்றும் வேலையைத் தொடங்குவதற்கு முன்பு சரிபார்க்கப்பட்டுள்ளன என்பதை உறுதிப்படுத்தவும். ஏதாவது மாற்றம் ஏற்பட்டால் நிறுத்தி உதவியை நாடுங்கள்.

	அச்சிடப்பட்ட பெயர் மற்றும் பொறுப்பு	கையொப்பம்	தேதி
வேலை தொடக்க சரிபார்ப்பாளர்			

உயரத்தில் வேலை செய்யும் போது (Working at Height)

